Registerd as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆனி 12 | [26-06-93] | சனிக்கிழமை | ஓசை 128

## வைத்தியசாலை வடிகாலில் வளரும் பொன்னாங்காணி விற்பனை

யாழ். போதனா வைத்தியசாலையின் சுற்றுப்புறமாக உள்ள மாநகரசபை வடிகாலில் வளரும் பொன்னாங்காணிக் கீரையை சில வியாபார நோக்கங் கொண்டவர்கள் வெட்டி சந்தையில் விற்பனை செய்வதாகத் தெரியவருகிறது. சுகாதாரச் சீர்கேட்டைத் தரும் இவ்விழிசெயலை எந்தக் குறுகிய நோக்கங்கொண்டும் செய்யாது மக்களை சுகாதாரமுறைப்படி வாழ வழிசெய்து, இது போன்ற ஏனைய கழிவிடங்களில் வளரும் பயிர்வகைகளையும், தரம்கெட்ட உணவு வகைகளையும் மக்களுக்கு மனிதாபிமானமற்ற முறையில் விற்பனை செய்யவேண்டாமென யாழ்ப்பாணம்சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொள்கிறார். தொற்றுநோய்கள் கட்டுப்பாட்டுக்கடங்காது தீவிரமாகப் பரவிவரும் இக்காலவேளையில் மக்கள் இதுபோன்ற விவகாரங்களில் விழிப்புடன் செயல்படுமாறும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வவுனியா ஊடாக இரு பெற்றோல் லொறிகள்

# கப்பலில் ஏனைய பொருள்கள் நாளை வரும்

(யாழ்ப்பாணம்)

பெற்றோல்கள் ஏற்றிய இரு லொறிகள் நேற்று வவுனியா ஊடாக வடக்கே வர இராணுவத்தால் அனுமதிக்கப்பட்டன. போர்க் கைதிகள் விடுதலை தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்தே பெற்றோல் ஏற்றிய லொறிகள் வடக்கே வர அனுமதிக்கப்பட்டுள்ளன. இதே வேளை, ஏனைய தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களை ஏற்றிக்கொண்டு 'றுகுணு', 'வாதுவ' ஆகிய இரு கப்பல்கள் நாளை பருத்தித்துறை துறைமுகம் வந்தடையவுள்ளன.

வவுனியா தடைமுகாமின் ஊடாக பெற்றோல்கள் ஏற்றி வந்த இவ் இரண்டு லொறிகளும் நேற்றுக் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்துவிட்டதாக அங்கிருந்து எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட றுகுணு, வாதுவகப்பல்கள் நாளைபருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

றுகுணு கப்பல் மண்ணெண்ணெய், டீசல், தேங்காய் எண்ணெய், சீமெந்து, யூரியா மற்றும் இதர எண்ணெய் வகைகளையும் எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

வாதுவவில் யாழ். செயலகத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களின் ஒரு தொகுதியுடன் ஏனைய பொருள்களையும் ஏற்றிவரும் என தெரியவருகிறது [க][நி]

# அரசாங்கத்தின் செய்தியுடன் பிரிகேடியர் இன்று வருகிறார்

## புலிகளுடன் அவசரப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் விசேடதூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா அரசாங்கத்தின்முக்கிய செய்தியுடன் மீண்டும் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இன்று காலை 7.30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தினூடாகயாழ்ப்பாணம் வரும் பிரிகேடியர் வீரசேகரா இன்று விடுதலைப் புலிகளுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடாத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பேச்சுக்களின் போது வடபகுதிக்கான தடை நீக்கப்பட்ட பொருள்களை விரைவாக அனுப்பி வைப்பது குறித்தும் இப்பொருள்களை அனுப்பி வைப்பதில் உள்ள நடைமுறைகள் குறித்தும் ஆராயப்படும். அத்துடன் புலிகளின் பாதுகாப்பில்உள்ள சிங்களப் பொலிசாரின் விடுதலை குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இந்த வாரத்தின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பிய பிரிகேடியர் வீரசேகரா கொழும்பில் அரச உயர் அதிகாரிகளுடனும் ஜனாதிபதியுடனும் மேற்படி விடயங்கள் குறித்து பேச்சு நடாத்தியுள்ளார். இப்பேச்சுவார்த்தைகளின்முடிவில்எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களுடனேயேபிரிகேடியர் யாழ்.வரவுள்ளார்.

பிரிகேடியர் வீரசேகராவுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகரும் யாழ்ப்பாணம் திரும்புவதாக நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன

## பூநகரி பாதை திறப்பு விவகாரம்

# ஐ. நா. அதிகாரிகள் செவ்வாய் யாழ். வருவர்

## புனர்வாழ்வுப் பகுதிக்கு

# பொருள்களின் பட்டியல் கூட்டுப்படை வழங்கியது

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்குத் தடைநீக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் தொடர்ந்தும் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படும் என்று கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான நடவடிக்கையில் கொழும்பு புனர்வாழ்வுப் பிரிவும் கூட்டுப்படைத் தலைமை[illegible]றன. கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் வடபகுதிக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டிய தடைநீக்கப்பட்ட பொருள்களைக் கூட்டுப்படை தலைமை அலுவலகம் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி அனுமதித்துள்ளதாகவும், கடல், தரை மார்க்கமாக வடபகுதிக்கு அடுத்த கட்டமாக எடுத்துச்செல்லப்படவிருக்கும் தடைநீக்கப்பட்ட பொருள்களின் பட்டியல் [illegible] புனர்வாழ்வுப்பகுதிக்கு வழங்கியுள்ளதாக நேற்றுமாலை கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. (க) (நி)

## மண்ணெய் முத்திரை பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

மண்ணெண்ணெய்க்கான முத்திரையின் பெறுமதியை அடுத்த மாதம் முதல் அதிகரிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் ஜனசவிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர்களைத் தாக்கி மீன்கள் பறிப்பு

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவரை வழிமறித்த சிறிலங்கா கடற்படையினர், [illegible] தாவது: கடலுக்கு சென்ற எம்மை அதிகாலையில் வழி மறித்த சிறிலங்கா கடற்படை

கிய செய்தியுடன் மீண்டும் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இன்று காலை 7.30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தினூடாகயாழ்ப்பாணம் வரும் பிரிகேடியர் வீரசேகரா இன்று விடுதலைப் புலிகளுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடாத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பேச்சுக்களின் போது வடபகுதிக்கான தடை விரைவாக அனுப்பி வைப்பது குறித்தும் இப்பொருள்களை அனுப்பி வைப்பதில் உள்ள நடைமுறைகள் குறித்தும் ஆராயப்படும். அத்துடன் புலிகளின் பாதுகாப்பில்உள்ள சிங்களப் பொலிசாரின் விடுதலை குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இந்த வாரத்தின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பிய பிரிகேடியர் வீரசேகரா காரிகளுடனும் ஜனாதிபதியுடனும் மேற்படி விடயங்கள் குறித்து பேச்சு நடாத்தியுள்ளார். இப்பேச்சுவார்த்தைகளின்முடிவில்எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களுடனேயேபிரிகேடியர் யாழ்.வரவுள்ளார்.

பிரிகேடியர் வீரசேகராவுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகரும் யாழ்ப்பாணம் திரும்புவதாக நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன

## பூநகரி பாதை திறப்பு விவகாரம்

# ஐ. நா. அதிகாரிகள் செவ்வாய் யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்) பூநகரிப் பாதை ஊடாக குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துவருவதற்காக இப்பாதையை திறந்து விடுவது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் குழு ஒன்று எதிர்வரும் திங்கள் என்று பலாலி வந்தடைந்து செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. காசிம் ஊர்க்காறும், மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் பீற்றர் நிக்கலசும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தினூடாக யாழ்ப்பாணம் வருவர் இக்குழுவினர் அன்றைய தினமே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இவர்கள் கேரதீவுப் பகுதிக்கும் சென்று நிலைமைகளை நேரடியாக அவதானிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [க. நி]

# சிங்களப் புத்திஜீவிகள் குழு யாழ்ப்பாணம் வர முயற்சி

## ஆயர்கென்னத் பெர்னாண்டோ ஏற்பாடு

(கொழும்பு) தென்பகுதி புத்திஜீவிகள் குழு ஒன்று நல்லெண்ண விஜயம ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருவதற்கு முயற்சி எடுத்து வருகிறது.

இக் குழுவினர் தமிழ் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்திஜீவிகளின் யாழ்ப்பாணத்துக்கான நல்லெண்ண விஜயத்துக்கானஏற்பாடுகளை அங்கிலிக்கன் ஆயர் திரு.கென்னதி பெர்னாண்டோ மேற்கொண்டு வருகிறார்.

தமிழ் மக்களது அடிப்படைப் பிரச்சினை உணவுப்பொருள்களும், மருந்துப்பொருள்களும் அல்ல என்றும் அவர்களது அடிப்படைப் பிரச்சினையான உரிமைப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் மட்டுமே நிரந்தர சமாதானம் ஏற்படும் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் இந்த நல்லெண்ணக்குழு ஈடுபடும் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப் புத்திஜீவிகள் குழுவின் யாழ் விஜயத்துக்கான பூர்வாங்க ஏறபாடுகளை அங்கிலிகன் ஆயர் திரு கென்னதி பெர்னாண்டோ மேற்கொண்ட போதிலும் இக் குழுவுக்கு ஆயர் தலைமை தாங்கவில்லையென்றும் தென்பகுதி புத்திஜீவி ஒருவரே இக் குழுவுக்கு தலைமை தாங்கி யாழ். வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ இக் குழுவின் யாழ். விஜயத்தைத் தொடர்ந்தாற் போல் சில தினங்களில் யாழ்ப்பாணம் வருவார் என்றும் கூறப்படுகிறது.

( 04ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானக் குழுவிற்கு பௌத்தபிக்கு கண்டனம்

தாய்லாந்து பௌத்த மத குருவும், கதோலிக்க மதகுருமாரும் வடபகுதி சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்ததை பெப்பிலியான சுனித்திராதேவி ஆச்சிரமத்தின் தலைவர் கலாநிதி மெதகொட சுமணதிஸ்ஸ கண்டித்துள்ளார்.

தாய்லாந்திலிருந்து தூதுக் குழுவோடு வந்த பௌத்த மதகுருவானவர் அங்கீகரிக்கப்பட்ட பௌத்த மதத்தைச் சார்ந்தவர் அல்ல என்றும், அவர் ஒரு சர்வதேச ரீதியான அரசியல் அமைப்பின் அங்கத்தவர் என்றும் அவர் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

முன்பு ஒருதடவை புலிகளைச் சந்தித்துத் திரும்பிய கத்தோலிக்க ஆயர் ஒருவர் கூறிய விடயங்கள் எமக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவரைப் புலிகள் நன்றாக உபசரித்து விட்டார்கள் என்பதற்காக புலிகள் நல்லவர்கள், நியாயமானவர்கள், கருணை உள்ளம் கொண்டுள்ளவர்கள் என்று வர்ணித்திருந்தார். புலிகளோடு பேச்சு நடத்த அவர்களை அரசாங்கம் அனுமதித்திருக்கக் கூடாது என்றும அவர் தெரிவித்தார்.

## புனர்வாழ்வுப் பகுதிக்கு

# பொருள்களின் பட்டியல் கூட்டுப்படை வழங்கியது

(கொழும்பு) வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்குத் தடைநீக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் தொடர்ந்தும் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படும் என்று கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான நடவடிக்கையில் கொழும்பு புனர்வாழ்வுப் பிரிவும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகமும் ஈடுபட்டிருக்கின்றன. கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் வடபகுதிக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டிய தடைநீக்கப்பட்ட பொருள்களைக் கூட்டுப்படை தலைமை அலுவலகம் எந்த விதக் கட்டுப்பாடுமின்றி அனுமதித்துள்ளதாகவும், கடல், தரை மார்க்கமாக வடபகுதிக்கு அடுத்த கட்டமாக எடுத்துச்செல்லப்படவிருக்கும் தடைநீக்கப்பட்ட பொருள்களின் பட்டியல் ஒன்றை கூட்டுப்படைத் தலைமையகம் புனர்வாழ்வுப்பகுதிக்கு வழங்கியுள்ளதாக நேற்று மாலை கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. (க) (நி)

று கு ணு கப்பல் மண்ணெண்ணெய், டீசல், தேங்

...யாவசியப் பொருள்களின் ஒரு தொகுதியுடன் ஏனைய பொருள்களையும் ஏற்றிவரும் என தெரியவருகிறது [க][நி]

## மண்ணெய் முத்திரை பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு) மண்ணெண்ணெய்க்கான முத்திரையின் பெறுமதியை அடுத்த மாதம் முதல் அதிகரிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன் பிரகாரம் ஜனசவிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அத்தியாவசிய பொருள்கள் விலை பெருமளவு வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்) யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகளில் நேற்று மேலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களான மண்ணெண்ணெய், மற்றும் ஏனைய எரிபொருள்கள் உட்பட தேங்காய் எண்ணெய்,சீனி,தீப்பெட்டி, துவிச்சக்கரவண்டிகள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள், மற்றும் பல அத்தியாவசிய உணவுப்பொருள்கள் போன்றவற்றின் விலைகளிலும் நேற்று பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ் விலைகளில் மேலும் விலை வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை குடாநாட்டில் உள்ள பல்வேறு வர்த்தக நிலையங்களின் முன்பாக எண்ணெய் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற வாசகம் அடங்கிய விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (க)

## 95 பயணிகளுடன் 'குமண' நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்) தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் குமண கப்பல் நாளை திருக்கோணமலை நோக்கி புறப்படுகின்றது.

சுமார் 95 பயணிகள் இக் கப்பலில் பயணமாகின்றார்கள். இவர்களுக்கான பிரயாணச் சீட்டுகள் நேற்று வழங்கப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 4 பிரதிநிதிகளும், கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த மூவரும், வங்கிகளின் சார்பில் ஒரு பிரதிநிதியும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியும்,போதனா வைத்தியசாலை, பிராந்திய சுகாதார அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், இந்துமத குருமார் ஐவரும், இடம்பெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், சுமார் 60 அரசாங்க உத்தியோகத்தர்களும் இக்கப்பலில் பயணம் மேற்கொள்ளுகின்றனர்என தெரியவருகின்றது.

## அம்பாறையில் தமிழருக்கு நிவாரணம் நிறுத்தம்

(கொழும்பு) அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் இடம்பெயர்ந்தோர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை சிறிலங்கா அரசு நிறுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு மற்றும் திருக்கோவில் பகுதிகளில் இருக்கும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்பவர்களுக்கான நிவாரணத்தை சிறிலங்கா அரசு நிறுத்தியுள்ளது.

அம் மாவட்டத்தில் சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்களுக்கு மத்தியில் தமிழர்களை குடியிருத்துவதற்கு சிறிலங்கா அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

## மீனவர்களைத் தாக்கி மீன்கள் பறிப்பு

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவரை வழிமறித்த சிறிலங்கா கடற்படையினர், புலிகளுக்கு மீனா? வியாபாரத்துகக்கு மீனா? எனக்கேட்டு தாக்கியதுடன், அவர்களிடமிருந்த மீன்களையும்பறித்துச் சென்றனர்.

இச் சம்பவம், கடந்த செவ்வாய் அதிகாலை5.00மணிக்கு பருத்தித்துறை முனைக் கடலில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் வைரமுத்து சிவராசா வயது(28), ராஜன் (வயது 22) ஆகியோர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இதுகுறித்து அவர்கள்கூறியதாவது: கடலுக்கு சென்ற எம்மை அதிகாலையில் வழிமறிந்த சிறிலங்கா கடற்படையினர் எம் இருவரையும் தாக்கியதுடன் ''புலிகளுக்கு மீனா? வியாபாரத்திற்கு மீனா? எனக் கேட்டு எம்மைத் தாக்கிவிட்டு மீன்களையும் பறித்துச் சென்றனர். அதோடு எமது படகினையும் சேதமாக்கிவிட்டு தமது விசைப்படகுடன் சேர்த்துக் கட்டி இழுத்துச் சென்று நடுக்கடலில் அவிழ்த்து விட்டுச் சென்றனர். நாம் வேறு படகின் உதவியுடன் கரை சேர்ந்தோம் என கவலையுடன்தெரிவித்தனர். (30)

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச படி

கெற்பலியில் இயங்கி வரும் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் கடமையாற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் கஷ்டப்பிரதேசபடி தை1993இல் இருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக வேலணைக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்கள் பெறும் சம்பளத்தில் பத்துவீதம் இக் கஷ்டப் பிரதேச படியாக வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இப் பாடசாலைக்கு இங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் சம்பளத்தை சாவகச்சேரி கல்விக் கோட்டம் வழங்குவதற்கு வசதியாக வேலணைக் கல்விக் கோட்டத்தினால் சம்பள விபரப் பட்டியல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

## பருத்தித்துறை இறங்குதுறை புனரமைக்க முயற்சி?

[யாழ்ப்பாணம்] பருத்தித்துறை துறைமுக இறங்குதுறைப் பகுதி புனரமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது. வடபகுதிக்கு தடை நீக்கப்பட்ட பொருள்கள் கப்பல்மூலமாக பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்து வருவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கப்பல் மூலமாக பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களில் இருந்து பொருள்களை விரைவாக இறக்குவதற்கு வசதியாகவே மேற்படி முயற்சி எடுக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் றுகுணு என்ற கப்பல் மூலம் சுமார் 500பைக்கட் சீமெந்து எடுத்துவரப்படவுள்ளது. இச் சீமெந்தைப் பயன்படுத்தி மேற்படி துறைமுகத்தை புனரமைக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

இதற்கான அனுமதியை நாளை கொழும்பில் இருந்து திரும்பும் யாழ். அரசாங்க அதிபர் பெற்றுக்கொண்டதாக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

கறுட்புநிற ஆண் அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- விஜி 125ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம்.
(5214)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொளளாவத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி.
(5220)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், கவெண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-6733)

### ஹோட்டல் ஞானம்ஸ்

புதிய மெருகுடன் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர்பானம், மதுபானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ்
(சி/6877)

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக்கழக முன்வீதி. கந்தர்மடம் ஆகியஇடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-6898

### வருடாந்த மகோற்சவம்

அராலி வடக்கு அருள்மிகு மயிலியற் புலம் கந்தசுவாமியார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

---

## பண்டிதமணி நினைவுப் பேருரை

27-06-1993 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 3-00 மணிக்கு

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தலைமையில்

"மெய்கண்டாருக்கு முற்பட்ட சைவசித்தாந்தம்"
என்னும் பொருளில்

கலாநிதி சோ. கிருஷ்ணராசா அவர்கள்
(தலைவர், மெய்யியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
நினைவுப் பேருரை நிகழ்த்துவார்கள்.

அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

[நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் தொடங்கும்]

செயலாளர்,
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
(5206) நினைவுக் காப்பு நிதியம்.

---

சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்:
1٠. 01. 1938

இறைவன் அடியில்:
27. 05. 1993

திதி:
26- 06- 1993

## அமரர் ஞானசேகரம் கணபதிப்பிள்ளை

அன்பின் சிகரமாய், பாசத்தின் விளைநிலமாய், எங்கள் குடும்பத்தலைவனாய் எம்மையெல்லாம் காத்து வளர்த்து கூடவே வல்வை வைத்தீஸ்வரன் நற்தொண்டனாய். அவன் ஆலயத் தொண்டுகள் பல ஆற்றி அமலன் அடி புகுந்து கொண்ட எம் தெய்வமே உங்கள் நினைவலைகள் என்றென்றும் எம் நெஞ்சத்தில் நீங்காது வீற்றிருக்கும் உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டு முன்னின்று நடத்திய உயர்ந்த உள்ளங்களுக்கும், ஆறுதல்கள் வழங்கிப் பல்வேறு ஒத்தாசைகள் புரிந்து எமமைப் பெருமைப்படுத்திய அயலவர், நண்பர்கள், உற்றார் உறவினர்கள் யாவர்க்கும் எமது நன்றிகள்.

இன்று 1993- 06- 26ஆம் திகதி அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டுக் கிருத்தியங்களிலும் அனைவரும் கலந்து

---

## தேவை

### உழுவியந்திரப் பெட்டி

4 சில்லு உழவியந்திரத்தால் இழுக்க கூடியதும், ரயர் நல்ல நிலையிலும் உள்ள உழவு இயந்திரப்பெட்டி வைத்திருப்பவர்கள் எதிர்பார்க்கும் விலையுடன் விண்ணப்பிக்கவும்.

### மோட்டார் சைக்கிள் தேவை

நல்ல நிலையில் உள்ள கொண்டா சுப்பர் கப், யமகா மேற் 50 மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் எதிர்பார்க்கும் விலையுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் கீழ்காணும் விலாசத்திற்கு 10-7-93 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

இக்கம், பொதுமுகாமையாளர்,
அல்வாய். வடமராட்சி தெ.ப.பொ.கூ. சமாசம்
(3435)

---




★ தரமான சுண்ணாம்பு வகைகள்

வெள்ளை அடிப்பதற்கு
கட்டிட பூச்சு வேலைக்கு
தளம் அமைக்கும் வேலைக்கு

(கிணறு. மலசலகூடம், குடியிருப்பு
நீர்த்தொட்டி நிர்மாண
வேலைகளுக்கு உபயோகிக்க
முடியும்)

★ மணல்

உங்களுக்கு தேவையான
அளவு பெற்றுக்கொள்ளலாம்

சுண்ணாம்பு விற்பனை நிலையம்
(உட்கட்டுமானம், த. பொ மே. கழகம்)
குளப்பிட்டி சந்தி. காங்கேசன்துறை வீதி,
கொக்குவில். (சி/6895)

---

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

---

யாழ் மத்தியகல்லூரி ஆசிரிய வட்டம் நடாத்தும்

## பரிசுச் சீட்டு பிற்போடல்

மேற்படி சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 16-07-1993க்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(5223)

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-26

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை- சாம்பல்தீவுப் பகுதியில் எமது முகாம் மீது சிறிலங்கா இராணுவம் முற்றுகையிட்ட போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**சிறைச்செல்வன்** (கதிர்காமத்தம்பி தவராஜ -குச்சவெளி - திருமலை)

1987ஆம் ஆண்டு முள்ளியானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். மகேந்திரன்** (நடராசா நாகராசா - பெரிய தம்பனை, செட்டிகுளம்- வவுனியா)

வடமராட்சி கிழக்கு - மணற்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். கீர்த்தி** (பாக்கியநாதன் சுதர்சன் - குருவீதி, காங்கேசன்துறை - யாழ்)

1988ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**நகுலன்** ( - யுனைதீன் - அட்டாளச்சேனை, அக்கரைப் பற்று - அம்பாறை)

1989ஆம் ஆண்டு வவுனியா- ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் விரச்சாவெய்திய-

**சின்னமகேந்தி** (இராசரத்தினம் கிருபாமூர்த்தி - தென்னமரவடி - திருமலை)

**அச்சுதன்** ( - கணேஸ் - பன்குளம் - திருமலை)

வன்னிப் பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர்,

**மேஜர் மாறன்** (சின்னத்துரை சுகுமார் - 129. கொல்விளாங்குளம், வவுனிக்குளம், மாங்குளம்- முல்லைத்தீவு)

**சுபன்** (இரத்தினம் அரியராசா - புதுக்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**பொபி** (தங்கராசா காந்தரூபன் - பொன்னகர், முள்ளியவளை - முல்லைததீவு)

**சபா** ( - சுந்தரலிங்கம் - முல்லைத்தீவு)

**லெப். அருள்** (சிதம்பரப்பிள்ளை தமிழரசன் - பத்தினியார் மகிழங்குளம் - வவுனியா)

**நவம்** (முத்துச்சாமி இந்திரகுமார் - மருதங்குளம், ஓமந்தை - வவுனியா)

**கேசவன்** (செல்லமுத்து ரஜீந்திரன் - பத்தினியார்' மகிழங்குளம் - வவுனியா)

**கப்டன் ரூபன்** (இராசையா சிவகுமாரன் - ஆஸ்பத்திரி வீதி, கண்டாவளை - கிளிநொச்சி)

**அகிலன்** (சோமசுந்தரம் மதிவண்ணன் - இல 175, திருநகர் - கிளிநொச்சி)

**லெப். நித்திலா** (பவானி நல்லையா - கொம்மாந்துறை, கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். முரளி** (குணராசா குமாரதாஸ் - முத்தமிழ் வீதி, 4-ம் ஒழுங்கை, கொட்டடி - யாழ்)

**விஜயன்** ( - ரவிக்குமார் - யாழ்ப்பாணம்)

சாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ்
(சி/6877)

## உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சலகள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, கந்தர்மடம் ஆகியஇடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-6898

## வருடாந்த மகோற்சவம்

அராலி வடக்கு அருள்மிகு மயிலியற் புலம் கந்தசுவாமியார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

## சாரளம் கருத்தரங்கு

வலி தென்மேற்கு சனசமூக நிலையங்களின் உப சமாசத்தின் ஒத்திசைவில் சாரளம் இதழ் கருத்து நிகழ்வு நாளை பகல் 10மணி அளவில் மானிப்பாய் பிரதேச பொது நூலகத்தில் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தலைவர் திரு. வை. செகராசசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம் ஐக்கிய நாணய சங்க சமாசத்தின் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபையின் மகளிர் குழுவினரால் பயிற்சி வகுப்புக்கள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 2-00 மணிககு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இப் பயிற்சி வகுப்புக்கு நல்லூர் பிராந்திய சபையின் கீழுள்ள அங்கத்துவ சங்கங்களின் மகளிர் பிரதிநிதிகள் சமுகம் தந்து பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிராந்திய சபையின் செயலாளர் செல்வி மேரி மண்சேரா பர்னாந்து அறியத் தருகின்றார்.

தலை அலங்காரம், கோலம் போடுதல், பொம்மை செய்தல், லேஸ்பின்னல், உள்ளூர் உற்பத்தியில் உணவு தயாரித்தல், தையல், கேக் ஐசிங் செய்தல் போன்ற பல பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இப் பயிற்சி வகுப்பிற்கு பங்கு பற்ற வரும் சங்கப்பிரதிநிதிகள் தாம் அங்கத்துவம் வகிக்கும் சங்கத்தின் தலைவர் செயலாளரினால் உறுதிப் படுத்தப்பட்டிருக்கும் கடிதத்துடன் சமுகம் தரும்படி பிராந்திய சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (24)



திதி:
26-06-1993

## அமரர் ஞானசேகரம் கணபதிப்பிள்ளை

அன்பின் சிகரமாய், பாசத்தின் விளைநிலமாய், எங்கள் குடும்பத்தலைவனாய் எம்மையெல்லாம் காத்து வளர்த்து கூடவே வல்வை வைத்தீஸ்வரன் நற்தொண்டனாய். அவன் ஆலயத் தொண்டுகள் பல ஆற்றி அமலன் அடி புகுந்து கொண்ட எம் தெய்வமே உங்கள் நினைவலைகள் என்றென்றும் எம் நெஞ்சத்தில் நீங்காது வீற்றிருக்கும் உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்டு முன்னின்று நடத்திய உயர்ந்த உள்ளங்களுக்கும், ஆறுதல்கள் வழங்கிப் பல்வேறு ஒத்தாசைகள் புரிந்து எமைப் பெருமைப்படுத்திய அயலவர், நண்பர்கள், உற்றார் உறவினர்கள் யாவர்க்கும் எமது நன்றிகள்.

இன்று 1993-06-26ஆம் திகதி அதிகாலை எமது இலலத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் வீட்டுக் கிருத்தியங்களிலும் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குச்சம் வீதி,
காந்தரூபன் வீதி,
வல்வெட்டித்துறை.

இவ்வண்ணம்
இவரது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், சகோதரி,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5213)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயக மண்ணில் | | தாயக விடிவில் |
|---|---|---|
| 06 — 02 — 1966 |  | 26 — 06 — 1989 |

## லெப்டினன்ட் நித்திலா

(நல்லையா பவானி)

எங்கள் மகளுடன் வீரச்சாவடைந்த
மேஜர் மாறன் கப்டன் ரூபன்
லெப். அருள் 2-ம் லெப். முரளி
வீரவேங்கை அச்சுதன் வீரவேங்கை பொவி
,, சுமன் ,, கேசவன்
,, நவம் ,, சின்ன மகேந்தி
,, சபா ,, விஜயன்
,, அகிலன்

ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

இன்று சனிக்கிழமை அனைத்து போராளிகளையும் எமது இல்லத்திற்கு வருகைதருமாறு அழைக்கின்றோம்.

கொம்மாந்துறை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினரும்,
உறவினர்களும்.

(5219)

★ தரமான சுண்ணாம்பு வகைகள்

வெள்ளை அடிப்பதற்கு
கட்டிட பூச்சு வேலைக்கு
தளம் அமைக்கும் வேலைக்கு

(கிணறு. மலசலகூடம், குடியிருப்பு
நீர்த்தொட்டி நிர்மாண
வேலைகளுக்கு உபயோகிக்க
முடியும்)

★ மணல்

உங்களுக்கு தேவையான
அளவு பெற்றுக்கொள்ளலாம்

சுண்ணாம்பு விற்பனை நிலையம்
(உட்கட்டுமானம், த. பொ மே. கழகம்)
குளப்பிட்டி சந்தி. காங்கேசன்துறை வீதி.
கொக்குவில். (சி/6895)

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

"போஸ்கோ ஸ்தாபனம்"
(3, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்) ஆதரவில்

இடம்: மன்றக்கலாமண்டபம். சட்டநாதர்வீதி, நல்லூர்
காலம்: 27-6-1993 ஞாயிறு மாலை 5 மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00 - 5.45 வயலின் இசை
செல்வி உஷா பரமரட்சகபாலன் - வயலின்
செல்வி சாந்தினி சஞ்சீவராசா - வயலின்
திரு. க. கண்ணதாசன் - மிருதங்கம்

5.45 - 6.45 இசைக் கச்சேரி
திருமதி ஞானகுமாரி சிவனேசன் - பாட்டு
செல்வன் எஸ். கோபிதாஸ் - வயலின்
திரு. எஸ். மகேந்திரன் - மிருதங்கம்
திரு. எஸ். துரைராசா - கெஞ்சிரா

6.45 - 7.15 மங்கள விளக்கேற்றல்
1. திரு. ஆ பஞ்சாட்சரலிங்கம் (உரிமையாளர் கமலேஸ்வரி வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்.
2. திரு. சு. தனபாலசிங்கம் (உரிமையாளர் ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)

தலைமையுரை: அருட்திரு. அ. இ. பேணாட், (அதிபர், யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி)

பிரதம விருந்தினர் உரை: கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, (தலைவர், மெய்யியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்)

7.15 - 8.45 சிறப்பு நிகழ்ச்சி: பரதநாட்டியம்
★ நாட்டியக் கலைமணி பரதகலா வித்தகர், செல்வி மைதிலி அம்பலவாணர்
நாட்டுவாங்கம்: திருமதி கிரிசாந்தி ரவீந்திரன்
பாட்டு: திரு: வர்ண இராமேஸ்வரன்
திரு. கே கண்ணதாசன் - மிருதங்கம்
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்

**இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !**

மேற்படி
மன்றத்தினர்

(சி-6894)

வன்னிப் பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர்,
**மேஜர் மாறன்** (சின்னத்துரை சுகுமார் - 129, கொல்விளாங்குளம், வவுனிக்குளம், மாங்குளம்- முல்லைத்தீவு)
**சுபன்** (இரத்தினம் அரியராசா - புதுக்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)
**பொபி** (தங்கராசா காந்தரூபன் - பொன்னகர், முள்ளியவளை - முல்லைததீவு)
**சபா** ( - சுந்தரலிங்கம் - முல்லைத்தீவு)
**லெப். அருள்** (சிதம்பரப்பிள்ளை தமிழரசன் - பத்தினியார் மகிழங்குளம் - வவுனியா)
**நவம்** (முத்துச்சாமி இந்திரகுமார் - மருதங்குளம், ஓமந்தை - வவுனியா)
**கேசவன்** (செல்லமுத்து ரஜீந்திரன் - பத்தினியார் மகிழங்குளம் - வவுனியா)
**கப்டன் ரூபன்** (இராசையா சிவகுமாரன் - ஆஸ்பத்திரி வீதி, கண்டாவளை - கிளிநொச்சி)
**அகிலன்** (சோமசுந்தரம் மதிவண்ணன் - இல 175, திருநகர் - கிளிநொச்சி)
**லெப். நீத்திலா** (பவானி நல்லையா - கொம்மாந்துறை. கம்பர்மலை - வல்வெட்டித்துறை)
**2-ம் லெப். முரளி** (குணராசா குமாரதாஸ் - முத்தமிழ் வீதி, 4-ம் ஒழுங்கை, கொட்டடி - யாழ்)
**விஜயன்** ( - ரவிக்குமார் - யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு கொக்காவில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தாஸ்** (அருளம்பலம் சந்திரமோகன்- கரிப்பட்டைமுறிப்பு - முல்லைத்தீவு)
**சங்கர்** (செல்லையா சந்திரகுமார் - கோணாவில் கிளிநொச்சி)

வவுனியா-மன்னார்-யாழ் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய-

**2ம் லெப். அசோக்** (கிருஷ்ணா செல்வராசா - இரணை இலுப்பைக்குளம், கல்மடு-வவுனியா)
**மௌலீசன்** (கந்தசாமி யோகன் நித்தியநாதன் - பூவரசங்குளம்-வவுனியா)
**கணேசலிங்கம்** (ராக்கப்பன்நாகராஜ் சிறிராமபுரம், மாறம்பைக்குளம்-வவுனியா)
**நீத்திலன்** (நா, குணராசா-வவுனியா)

யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**அன்ரனி** (விசுவர் நாகலிங்கம் குணராசா-கெற்பலீ- மிருசுவில்- யாழ்)

அம்பாறை-காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டோரில் சடலங்களாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள். தாண்டியடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழிளைஞர்கள்.

மட்டு-இராஜபுரம், கரடியனாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப்பெண். துறைநீலாவணை-சவளக்கட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

யாழ்-கொக்குவில் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில கொல்லப்பட்ட 06 குழந்தைகள் உட்பட 07 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6893)

**சிந்தனைக்கு**

இழந்துவிட்ட கோடரி, இரத்தினக்கல் பதித்ததாகத்தானே இருக்கும்.
— திபெத் பழமொழி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## கற்பனை உலகில் ராணுவ அதிகாரிகள்

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தியிருப்பது குறித்து இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் முரண்பாடு நிலவுவதாகவும், இதில் ஒரு பகுதியினர் விரக்தியும், கவலையும் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் பொருளாதாரத்தடை தளர்ச்சியானது, விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிக்கும் என்றும், விடுதலைப் புலிகளுக்கு ஒட்சிசன் ஏற்றப்பட்டது போன்றது எனவும் கருதுவதாகவும் தெரியவருகின்றது.

வடபகுதி மீதான பொருளாதாரத்தடை தமிழ் மக்களைப் பாதித்தது என்பது உண்மைதான். இதனால், மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, தொழிலிழந்து வருமானம் இழந்து, கஷ்டத்திற்கு உள்ளாகினர். அத்தோடு விலைவாசி ஏற்றம் அவர்களை பெரும் துயருக்குள்ளாக்கியது. இதன் காரணமாக விடுதலைப் புலிகளும் சில சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமையும் உண்மைதான்.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. 'ஒட்சிசன்' எற்ற வேண்டிய நிலையில் உள்ளது என்பதெல்லாம் கற்பனை உலகில் சஞ்சரிக்கும் சிங்கள இராணுவ அதிகாரிகளின் கூற்றாகும். இவை அவர்களின் வெறும் வாய்ப்பந்தல் ஆகும். ஆனால், இவ்வாறு இன்று மட்டும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் கூறவில்லை. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதில் இருந்தே கூறி வருகின்றனர்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி இரு மாதங்களின் பின்னர், சிங்கள இராணுவத்தின் புகழ்பூத்த தளபதியான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகள் விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள் என்றார். ஆனால், அது முடியவில்லை. அதன்பின்னர், தற்போதைய இராணுவத் தளபதியும் கடந்த வருட ஆரம்பத்தில், மூன்றுமாத காலத்திற்குள் புலிகளை கிழக்கில்இருந்து விரட்டியடிப்பேன் எனத் தெரிவித்தார். அதுவும் நடைபெறவில்லை. மூன்றுவருடங்களாகியும் புலிகளை கிழக்கில் இருந்து வெளியேற்றும் பணிநிறைவுறவில்லை. இன்றும், புலிகளுக்கு

# போரை நிறுத்திக்கொள்ள புலிகளுடன் பேசுங்கள்

## தமிழ் எம்.பி. வற்புறுத்து

(கொழும்பு)

''வடக்கு கிழக்கு போரை முடிவுக்கு கொண்டுவருவதானால் நான் இங்கும் கூறுகிறேன் பாராளுமன்றத்திலும் பல முறை கூறியுள்ளேன் விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே இப்போரை முடிவுக்கு கொண்டு வரமுடியும் இதுதான் யதார்த்தம் என்பதை அரசாங்கமும் புரிந்து கொண்டுள்ள போதிலும் இதுவரை போரை முடிவுக்கு கொண்டுவர எதுவித ஆக்கபூர்வ முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.'' இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எம்.பி ஒருவர் மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

''நாட்டின் நெல் உற்பத்தி 12 சதவீதம் எமது மாவட்டத்திலிருந்தே உற்பத்தியானது இன்று 5சதவீத நெல் உற்பத்தியை பெறுவதே முடியாத காரியமாகவுள்ளது. ஆசிய கண்டத்தில் பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக பாதுகாப்பிற்கென நாடு அதிக தொகையை செலவிடும் பெருமை பெற்றுள்ளது.

''ஆண்டுதோறும்2500கோடி ருபா பாதுகாப்பிற்கு செலவாகிறது. இது நாட்டின் மொத்த வருமானத்தில் 32 சதவீதமாகும் இதேபோன்று கடன்களுக்கு வட்டியாக மொத்த ஆண்டு வருமானத்தில் 25 சதவீதம் செலுத்தப்படுகிறது. இவை இரண்டும் மொத்த வருமானத்தில் 60 சதவீதத்தை செலவு செய்கிறது. மிகுதி 40 வீத பணத்தில் எப்படி நாட்டை நிர்வாகிக்க முடியும். எனவே ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நாடு கடன் பெறுகிறது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர், ''பாரீஸ் உதவி வழங்கும் மாநாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் கடன் பெறுவதற்காக காவடி எடுக்கப்படுகிறது. பிச்சை எடுப்பதே நிதி அமைச்சின் தொழிலாகி விட்டது. எனவே நாம் வடக்கு கிழக்கு போரரை முடிவுக்கு கொண்டு வருமாறு கோருகிறோம்.''

''இலங்கைக்கு கடன் வழங்கும் உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் தாம் கொடுக்கும் கடனை போருக்கு செலவு செய்ய முடியாது அதற்கு நீங்களே பணத்தை தேடிக்கொள்ளுங்கள் என்று அரசுக்கு கூறிவிட்டன. அப்படியானால் என்ன செய்ய முடியும். இரண்டு வழியே உண்டு. ஒன்று புலிகளுடன் பேசி இப்போரை முடிவுக்கு கொண்டுவருவது, இரண்டாவது மேலும் வரிகளை கூட்டி மக்கள் மீது சுமையை ஏற்றுவது'' என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆடு வளர்ப்புத் திட்டம் நடைமுறையாகின்றது

கிளிநொச்சியில் தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக் கழகம்வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 50 குடும்பங்களைத் தெரிவுசெய்து சமூகமேம்பாட்டுத் திட்டமாக அவர்களுக்கு ஆடுவளர்ப்புத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டமானது கிளிநொச்சி தெற்கில் செல்வாநகர் கிராமத்திலும், கிளிநொச்சி மேற்கில் ஊற்றுப்புலம், எள்ளுக்காடு ஆகிய கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த இருபது பயனாளிகளுக்குக் கடந்த 19-ம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக ஆடுகள் வழங்கப்பட்டன

ஏனைய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் தொழுவம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், அவ்வேலைமுடிவடைந்தவுடன் அவர்களுக்கும் ஆடுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமயாசமய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

1992 ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பதாக அரசசேவையில் கீழ்மட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சமயாசமய தற்காலிக ஊழியர்களுக்கு இவ்வருட மே முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுநிர்வாக அமைச்சு கோரியுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஊழியர்கள் வெற்றிடம் உள்ள துறையில் நிரந்தர பதவிநிலை ஒன்றில் தொடர்ச்சியாக சேவையாற்றியிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### ஹேமாவுடன் முரண்பாடு

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாசாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே ஏற்பட்டுள்ளகருத்து

### இலக்கிய விழா

(குருநகர்)

யாழ்- பிரதான வீதி திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்று வரும் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5.30 மணிக்கு வித்துவான்

### சஞ்சிகை வெளியீடு

யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத்தினரின் புவியியல'' என் சஞ்சிகை வெளியீட்டு விழா திங்கள் மாலை 3 மணிக்கு புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

### வர்த்தக ஊழியர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற வர்த்தக ஊழியர் சங்க நிர்வாகசபை கூட்டத்தில்சகல வர்த்தகஊழியர்களுக்கும் 300 ரூபா சம்பள உயர்வை மாதாந்தம் வழங்குவதெனஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய நிலையில் ஒரு வருடம் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு 2300 ரூபா மாதாந்தச் சம்பளம் கிடைக்கச் செய்யுமாறும் வர்த்தக ஊழியர் நிர்வாக சபை

## கரும்புலிகள் தின போட்டிகள் விபரம்

ஜூலை 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் 'கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் அரங்கப் போட்டிகளினதும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளினதும் கோட்ட மட்டத் தேர்வுக்கான விபரங்கள் பின்வருமாறு: இத்தேர்வின் பின்னர், மாவட்ட மட்டத்திலான தேர்வு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| தீவகம் | இணுவில் | 26, 27. 06. 1993 |
| வலிகாமம் | மத்திய கல்லூரி | காலை 10.00 மணி |
| வடமராட்சி | வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை | 28, 29,. 06. 1993 பிற்பகல் 3.00 மணி |
| தென்மராட்சி | இந்துக்கல்லூரி சாவகச்சேரி | 29, 30. 06. 1993 பிற்பகல் 3.00 மணி |

மேற்குறிப்பிட்ட திகதிகளில் விண்ணப்பிக்கப்பட்ட நாடகங்களும், பாரம்பரிய விளையாட்டுக்களில் கோலாட்டம், கரகம், ஆட்டக்காவடி, கும்மி என்பனவும் நடைபெறும்.

கிளித்தட்டு நிகழ்ச்சி கீழ் குறிப்பிட்டவாறு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| தென்மராட்சி கோட்டம் | மின்ஒளி விளையாட்டுக் கழகம், கைதடி | 27, 28, 29 30. 06. 93 பி. ப. 3. 00 மணி |
| தீவகம் கோட்டம் | சாம்சன் குடியேற்றம் அரியாலை | 29, 30. 06. 93 பி ப. 3. 00 மணி |
| வடமராட்சி | நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்நெல்லியடி. | 26, 27. 06. 93 |
| வலிகாமம் | கல்வலை நந்தன் விளையாட்டு மைதானம் சண்டிலிப்பாய் அலிஸ்ரன் விளையாட்டு மைதானம் உடுவில் ஐயன்னா விளையாட்டு மைதானம் சுன்னாகம் திருமகள் விளையாட்டு மைதானம் அரியாலை காந்திஜி விளையாட்டு மைதானம் அரியாலை சைவப்பிரகாச வித்தி-யாலயம் சங்கானை ஐக்கிய விளையாட்டு மைதானம் நீர்வேலி | 26, 27, 28. 06. 93 பி.ப. 3. 00 மணி |

சீனடிசிலம்படி, போர்த்தேங்காய் உடைத்தல் இரண்டு நிகழ்ச்சிகளும் மாவட்ட மட்டத்திலான ஒரே நிகழ்ச்சியாக நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் 1, 2. 7. 93 அன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறும் என விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

## வங்கி பாதுகாப்பிற்கு துப்பாக்கிகள் ஏன்?

### பொலிஸ் அதிகாரி விசனம்

(கொழும்பு)

தாக்குதல்களிலிருந்து வேலைத் தளங்களைப் பாதுகாப்பது எப்படி என்பது தொடர்பான கருத்தரங்கொன்று கடந்த வியாழனன்று முகத்துவாரம் மகாபொல நிலையத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்றது. இதில் தனியார் முகாமைத்துவத்தின் கீழ் நடைபெறும் பாதுகாப்பு வழங்கும் சேவை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பிரிகேடியர் எல். ஜே. ஐ. பெர்னான்டோ ''விடுதலைப் புலிகள் கொழும்பிற்குள் ஊடுருவியிருப்பதாகத் தகவல் கிடைத்தி... ஊழியர்கள் செயல்பட வேண்டும்'' என்று கூறினார். பல பாதுகாப்பு அதிகாரிகளும் இக்கருத்தரங்கில் உரையாற்றினர்.

பொலிஸ் அத்தியட்சகர் லலித் குணசேகர உரையாற்றும்போது வங்கிகளின் வாசல்களில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் துப்பாக்கிகளைக் கொடுக்காமல் விட்டிருந்தால் வங்கிகள் கடந்த காலங்களில் நாசகாரர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்க மாட்டாது என்றார். வாசலில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் துப்பாக்கியை எடுத்து அதனைக் காட்டியே வங்கி ஊழியரை மிரட்டி பணம் கொள்

யிருந்தமையும் உண்மைதான்.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. 'ஒட்சிசன்' ஏற்ற வேண்டிய நிலையில் உள்ளது என்பதெல்லாம் கற்பனை உலகில் சஞ்சரிக்கும் சிங்கள இராணுவ அதிகாரிகளின் கூற்றாகும். இவை அவர்களின் வெறும் வாய்ப்பந்தல் ஆகும். ஆனால், இவ்வாறு இன்று மட்டும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் கூறவில்லை. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதில் இருந்தே கூறி வருகின்றனர்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி இரு மாதங்களின் பின்னர், சிங்கள இராணுவத்தின் புகழ்பூத்த தளபதியான லெப். ஜெனரல் டென்சில் கொபபேகடுவ கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகள் விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள் என்றார். ஆனால், அது முடியவில்லை. அதன்பின்னர், தற்போதைய இராணுவத் தளபதியும் கடந்த வருட ஆரம்பத்தில், மூன்றுமாத காலத்திற்குள் புலிகளை கிழக்கில்இருந்து விரட்டியடிப்பேன் எனத் தெரிவித்தார். அதுவும் நடைபெறவில்லை. மூன்றுவருடங்களாகியும் புலிகளை கிழக்கில் இருந்து வெளியேற்றும் பணிநிறைவுறவில்லை. இன்றும், புலிகளுக்கு எதிராக கிழக்கில்இராணுவ நடவடிக்கைதொடர்ந்த வண்ணமே உள்ளது.

வடக்கைப் பொறுத்து யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றுவது சிறிலங்கா இராணுவத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். ஆனால், இது குறித்து, இறுதித் திட்டமும் அவர்களிடம் இருந்தது. 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் யாழ். குடாநாட்டின் 'ஒப்பரேசன் வலம்புரி' நடவடிக்கையில் தீவுப்பகுதி முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்தபோது கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக தலைமை தாகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ''யாழ். நகரில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கிறோம் எப்பொழுதும் இராணுவம் நகருக்குள் நுழையலாம் என்றார். ஆனால், வருடங்கள் இரண்டாகியும் அது சாத்தியமாகவில்லை. 1.5 கி.மீ தொலைவில் இராணுவம் தரித்து நிற்க வேண்டியே வந்தது.

இதேபோன்றே கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் முப்படைத் தளபதிகளும் இணைந்து மேற்கொண்ட பலவேகய II இராணுவ நடவடிக்கை மூலம் குடாநாட்டிற்கான தரைவழிப் பகுதிகள் முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகளின் கழுத்து நெரிக்கப்படுகின்றது என இராணுவத் தரப்பு தெரிவித்தது. சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் கூக்குரல் இட்டன.

ஆனால் நடந்ததோ வேறு. கடந்த வருடத்தில் என்றுமில்லாத பேரிழப்புக்களை இராணுவம் கண்டது. பெருமளவு உயிர், பொருள், தளபாட இழப்புக்களையும் என்றுமில்லாதவாறு சந்தித்தது. இதன் விளைவாக இராணுவத்திலிருந்து ஆயிரக் கணக்கானோர் ஓடினர். இராணுவத்தின் போரிடும் மனோபலம் குன்றியது. இராணுவக் கட்டமைப்பில் சீர்திருத்தங்களும், மாற்றங்களும் செய்ய வேண்டிய அவசியம் எழுந்தது. இந்நிலையில், இராணுவம் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் குறித்தும் பேசுவதைத் தவிர்த்தது.

இந்நிலையில், புலிகள் திணறிக் கொண்டிருக்கின்றார்கள், ஒட்சிசன் ஏற்ற வேண்டிய நிலையில் உள்ளார்கள் என்பதெல்லாம் இராணுவ அதிகாரிகளின் யதார்த்தத்திற்குப் புறம்பான கற்பனைக் கதைகளாகும். இவை தமிழ் மக்கள் குறித்தும், விடுதலைப் புலிகள் குறித்தும் தப்பான கற்பிதமுமாகும்.

---

கடன்களுக்கு வட்டியாக மொத்த ஆண்டு வருமானத்

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஊற்றுப்புலம் கிரா

## சமயாசமய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

1992 ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பதாக அரசசேவையில் கீழ்மட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சமயாசமய தற்காலிக ஊழியர்களுக்கு இவ்வருட மே முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுநிர்வாக அமைச்சு கோரியுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஊழியர்கள் வெற்றிடம் உள்ள துறையில் நிரந்தர பதவிநிலை ஒன்றில் தொடர்ச்சியாக சேவையாற்றியிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### ஹேமாவுடன் முரண்பாடு

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாசாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே ஏற்பட்டுள்ளகருத்து வேற்றுமை தற்போது உச்ச கட்டத்தை அடைந்துள்ளது.

### இலக்கிய விழா

(குருநகர்)

யாழ்- பிரதான வீதி திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்று வரும் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5.30 மணிக்கு வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

### சஞ்சிகை வெளியீடு

யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத்தினரின் புவியியல்" என் சஞ்சிகை வெளியீட்டு விழா திங்கள் மாலை 3 மணிக்கு புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

### வர்த்தக ஊழியர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற வர்த்தக ஊழியர் சங்க நிர்வாகசபை கூட்டத்தில்சகல வர்த்தகஊழியர்களுக்கும் 300 ரூபா சம்பள உயர்வை மாதாந்தம் வழங்குவதென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய நிலையில் ஒரு வருடம் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு 2300 ரூபா மாதாந்தச் சம்பளம் கிடைக்கச் செய்யுமாறும் வர்த்தக ஊழியர் நிர்வாக சபை வேலை கொள்வோரை கோரியுள்ளது.

## வங்கி பாதுகாப்பிற்கு துப்பாக்கிகள் ஏன்?

### பொலிஸ் அதிகாரி விசனம்

(கொழும்பு)

தாக்குதல்களிலிருந்து வேலைத் தளங்களைப் பாதுகாப்பது எப்படி என்பது தொடர்பான கருத்தரங்கொன்று கடந்த வியாழனன்று முகத்துவாரம் மகாபொல நிலையத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்றது. இதில் தனியார் முகாமைத்துவத்தின் கீழ் நடைபெறும் பாதுகாப்பு வழங்கும் சேவை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பிரிகேடியர் எல். ஜே. ஐ. பெர்னான்டோ ''விடுதலைப் புலிகள் கொழும்பிற்குள் ஊடுருவியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே விழிப்புணர்வுடன் பாதுகாப்புச் சேவை ஊழியர்கள் செயல்பட வேண்டும்'' என்று கூறினார். பல பாதுகாப்பு அதிகாரிகளும் இக்கருத்தரங்கில் உரையாற்றினர்.

பொலிஸ் அத்தியட்சகர் லலித் குணசேகர உரையாற்றும்போது வங்கிகளின் வாசல்களில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் துப்பாக்கிகளைக் கொடுக்காமல் விட்டிருந்தால் வங்கிகள் கடந்த காலங்களில் நாசகாரர்களால் கொள்ளையடிக்கப்பட்டிருக்க மாட்டாது என்றார். வாசலில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் துப்பாக்கியை எடுத்து அதனைக் காட்டியே வங்கி ஊழியரை மிரட்டி பணம் கொள்ளையடிக்கப்பட்டது என்றார் அவர்.

---

# துருக்கிய தூதரகங்கள் மீது குருதீஷ் தீவிரவாதிகள் தாக்கு;

(பெர்லின்)

குருதீஷ் தீவிரவாதிகள் ஐரோப்பாவில் துருக்கிய தூதுவராலயங்கள் மீது நேற்றுத் தாக்குதல் செய்தனர். ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஆகிய நாடுகளிலேயே தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

மியூனிக்கில் குருதீஷ் தீவிரவாதிகள் துருக்கிய நாடடுக் கான்ஸ்லகேட்டில் 28 பேரைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். எனினும் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சுவிஸ் தலைநகர் பேர்னில் துருக்கிய தூதுவராலயம் முன் குருதீஷ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து தூதுவராலயத்துக்கு சேதம் விளைவிக்க முயன்ற போது ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையில் ஒருவர் கொல்லப்பட்டார் பலர் காயமடைந்தனர்.

குருதீஷ் தீவிரவாதிகளைக் கைது செய்து துருக்கியரிடம் ஒப்படைக்கும் படி துருக்கி அரசு ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்தி வருகிறது.

இதே வேளை துருக்கியில் அரச துருப்புகளுக்கும், கிழக்குத் துருக்கியில் தனிநாடு கோரிப் போராடும் குருதீஷ் தொழிலாளர் கட்சிப் போராளிகளுக்குமிடையில் சண்டை நடந்து கொண்டிருக்கிறது இப்போரினால் கிழக்குத் துருக்கியில் இதுவரை 360 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

### 11பேர் பலி

(மாஸ்கோ)

மாஸ்கோவில் எரிபொருளை ஏற்றிச் சென்ற பௌசர் வண்டி ஒன்றிலிருந்து சிதறிய எண்ணெய் காரணமாக மூன்று ட்ரொலி பஸ்கள் எரிந்து சாம்பலாயின. இதில் 11 பேர் பலியாகினர். கொங்கிரீட் துண்டுகளை ஏற்றிச் சென்ற லொறி மேற்படி பௌசருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

## ஐ. நா. தகர்ப்பு சதி 8 பேர் குற்றவாளிகள்

(வாஷிங்டன்)

நியூயோர்க்கில் ஐ. நா சபை கட்டடத்திற்கும் வேறு இலக்குகள் சிலவற்றின் மீது குண்டுத்தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் பேரில் கைதான எட்டு பேர் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் முஸ்லிம் அடிப்படைவாதிகள் எனவும் ஐவர் சூடான் நாட்டவர்கள் எனவும் எவ். பி. ஐ அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்கள் பிணையில் செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள குவின்ஸ் வீதியில் அமைந்திருந்த குண்டு தொழிற்சாலையில் இவர்கள் கைதானதாக எவ். பி. ஐ வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களை பலநாட்களாக பின் தொடர்ந்ததாகவும் நாட்டைவிட்டுவெளியேற இவர்கள் முயற்சித்த போதே கைதானதாகவும் மேலும்தெரிவிக்கப்படுகிறது.

## விம்பிள்டன் போட்டியில் லெண்டல் தோல்வி

(லண்டன்)

பிரபல முன்னிலை டெனிஸ் ஆட்டக்காரரான இவான் லெண்டல் விம்பிள்டன் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு விட்டார். புதிதாக போட்டியில் நுழைந்த பிரெஞ்வீரர் அனோகாஷிடம் இவர் இரண்டாவது சுற்றில் தோல்வியடைந்தார்.

இவான் லெண்டல் விமபிள்டன் கேடயத்தை தவிர்ந்த மற்றைய அனைத்து டெனிஸ் போட்டி கேடயங்களையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் இராஜினாமா

(லண்டன்)

வட அயர்லாந்து அமைச்சர் மைக்கல் மெற்ஸ் இராஜினாமா செய்து விட்டார். சைப்பிரஸ் துருக்கியரான நதீர் என்ற வர்த்தகரிடம் இவர் இரகசியமாக பணம் பெற்றதாக குற்றஞ் சாட்டப்பட்டமை தெரிந்ததே.

# நாஞ்சில் மனோகரன் தி. மு. க விலிருந்து நீக்கம்

(சென்னை)

தி. மு. க. துணைப் பொது செயலரும், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினருமான நாஞ்சில் மனோகரன் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச் செயலர் க. அன்பழகன் நேற்றுமுன்தினம் இதை அறிவித்தார்.

மனோகரன் கட்சி கட்டுப்பாட்டை மீறியும், பழித்தும் கண்ணியத்தைக் குலைக்கும் முறையிலும் செயற்பட்டு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். மனோகரனுக்குப் பதிலாக கருணாநிதியின் நெருங்கிய சகாவான ஆற்காடு வீராசாமி துணைப் பொதுச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் தி. மு. க விலிருந்து தம்மை நீக்கியது சட்ட விரோதமானது என நாஞ்சில் மனோகரன் தெரிவித்தார். தமது நிலையை விளக்க தமக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும், தம்மைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் பொதுக்குழுவிற்கே உண்டு என்றும் தெரிவித்தார்

## போராளி குழுக்களை வெளியேற்றிவிட்டேன்

### ஜெயலலிதாகூறுகிறார்

தமிழ்நாட்டில் தமது அரசு பதவிக்கு வந்தபின் விடுதலைப்புலிகள் உட்பட அனைத்து போராளிக் குழுக்களையும் முற்றிலும் மாநிலத்திலிருந்து வெளியேற்றிவிட்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தெரிவித்தார். சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற காவல் துறை உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் இரண்டு நாள் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மாநிலத்தில் தீவிரவாதிகளோ பயங்கரவாதிகளோ நேரடியாகவோ மறைமுகமாகவோ மீண்டும் செயற்படாது இருக்க கடலோரப் பகுதியை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் இலங்கை அகதி முகாம்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜெயலலிதா கோரினார்.

## பிரேமாவின் வேலையாட்கள்

# வீரகுமாருடன் வைத்திருந்த தொடர்புபற்றி விசாரணை

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் அவரின் தனிப்பட்ட வாசஸ்தல பணியாட்களான நால்வரும் ஜனாதிபதி படுகொலையையொட்டி விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. அமரசேன ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு அதிகாரிகளும் பணியாட்களும் கொலை சந்தேகநபருடன் வைத்திருந்த தொடர்புகள் பற்றியே தற்பொழுது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்என்றும் அவர் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேகப் பாதுகாப்பு அதிகாரியான மொஹிதீன் இந்தப் பாதுகாப்பு அதிகாரிகளையும், பணியாட்களையும் வீரகுமாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். வீரகுமார் ஒழுங்கு செய்து வைத்திருந்த வைபவங்களில் இவர்கள் கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் இவரின் லொறிகள் சோதனையிடப்படாமல் இருக்கவும் உதவினார்கள் என்றும் அவர் கூறினார்.

மொஹிதீன் இந்தப் பணிப்புரைகளை வழங்கியிருந்தார். பொலிசாரும் இராணுவ அதிகாரிகளும் அதற்கு கட்டுப்பட்டு நடந்தனர். மொஹிதீனின் வேண்டுகோளை அவர்கள் ஏற்றுச் செயல்பட்டது தவறாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதியின் பிரத்தியேகப் பாதுகாப்பு அதிகாரியின் வேண்டுகோளைச் சிறிய அதிகாரி ஒருவர் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியுமா என நிருபர் ஒருவர் பிரதிபொலிஸ்மா அதிபரிடம் கேட்டபோது அதை ஏற்று நடப்பது அவர்களின் பலவீனத்தையே காட்டுவது என பதிலளித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 25-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10058

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9167, 24-3906, 27-6024, 26-2972, 27-4301, 28-0159, 26-3962, 26-5071, 24-4491, 24-5461, 26-4393, 27-9404, 24-6293, 42-1059, 26-5814, 43-0517,


யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப்

**பொதுக்கூட்டம்**

மேற்படி வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 28-06-1993 திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. த. கந்தையா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வித்தியாலயத்தின்பழைய மாணவர்களாக விளங்குபவர்கள் குறிப்பிட்ட தினம் கூட்டத்திற்கு சமுகமளித்து தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதுடன் வித்தியாலய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான உதவிகளை வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

– தலைவர்

(கி-6896)


## யாழ். மத்தியில் ஊருருவல்...

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா

வாடிக்கையாளரின் நலன்கருதி

## முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சை

1992ஆம் ஆண்டிற்குரிய முறைசாராக் கல்விப் பிரிவு, தொழிற்திறன் பயிற்சி, குறுங்கால பயிற்சிமற்றும்வாரஇறுதி ஆங்கில வகுப்புக்களுக்கான இறுதிப்பரீட்சைகள்எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதனை யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்வி இணைப்பாளரும் பிரதிக் கல்விப்பணிப்பாளருமான திரு. ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டபரீட்சார்த்திகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதிக்கிடையில் பாடசாலை அதிபர்களைச் சந்தித்து அனுமதி அட்டைகளைப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [பா]

## எலுமிச்சை மரங்களில் சுரங்கப்புழு தாக்கம்

எலுமிச்சை மரக்கன்றுகளில் அண்மையில் பெய்த மழையுடன் தோன்றிய புதிய துளிர்களில் இலை சுரங்கப் புழுவினதும், வண்டுகளினதும் தாக்கம் தென்படுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதியினர்விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலை சுரங்கப்புழு குருத்துக்களையே தாக்குகிறது. குருத்து பாதிக்கப்படுவதால் பயிர் பாதிக்கப்பட்டு விளைவு பாதிக்கப்படுகிறது. வண்டுகள் இலையை இரவில் உண்கின்றன.

இத்தாக்கத்தைக் கட்டுப்படுத்த டிப்ரெக்ஸ் 50 /.எல்சி அல்லது என்தோசான் அல்லது எல்சான் ஆகியவற்றுள் ஏதாவது ஒரு கிருமிநாசினியில் 28 மில்லி லீற்றரை 13 5 லீற்றர் நீரில் கலந்து விசிறும்படி மேலும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் உருவப்படங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டக் காலத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கீழ்வரும் மாவீரர்களின் போஸ்ரர் படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை' கொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம்:

வீரவேங்கை ஜீவா (சசிலதா தனபாலசிங்கம்) மட்டுவில் தெற்கு.
மேஜர் யாசின் / யாசீர் (கந்தசாமி சிவதாஸ்) உசன்தெற்கு, மிருசுவில்.
வீரவேங்கை கலைவாணி (நிர்மலா பாலசுந்தரம்) சாவகச்சேரி.
வீரவேங்கை நியூட்டன் (கந்தையா தேவராசா) களபூமி, காரைநகர்.
லெப். வரன் (சுந்தர் தர்மகுலசிங்கம்) உருத்திரபுரம். கிளிநொச்சி.
2-ம் லெப். சிவபாலன் (மருதுப்பிள்ளை சத்தியநாதன்) பூந்தோட்டம், வவுனியா.
வீரவேங்கை விஜி (பாலச்சந்திரன் இலங்கேஸ்வரன்) குச்சவெளி, திருமலை.
வீரவேங்கை நளினி (மேகலா இரத்தினராசா) உரும்பராய்.
2-ம் லெப். விசா (பிறின்ஸ்ராகல் ராஜன்) சாம்பல்தீவு, திருமலை.
வீரவேங்கை மாக்ஸ் (பத்மநாதன் ராஜ்குமார்) மடுக்கோயில், மன்னார்.
வீரவேங்கை விக்டர் (இராசரத்தினம் சத்தியபாலன்) புல்மோட்டை, திருமலை.
கப்டன் முகுந்தன் (தியாகராசா விக்கினேஸ்வரன்) தாளையடி.
வீரவேங்கை குயின்சி (தயாநிதி தர்மராசா) அராலி, வட்டுக்கோட்டை.
வீரவேங்கை சுரேஸ் (சுப்பிரமணியம் சிவகுமார்) சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.
வீரவேங்கை பன்னீர்(இரத்தினம் பன்னீர்ச்செல்வம்) கல்முனை, அம்பாறை

### திருவாசக விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்எடுக்கும் திருவாசக விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை பிற்பகல் மூன்றுமணி அளவில் நடைபெறவுள்ளது. கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வன் வ. சிறீபிரசாந்தன், ஆசிரியர் த. சிவகுமாரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன

### பண்டிதமணி பிறந்ததின விழா

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 94 ஆவதுபிறந்ததின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதிகலையரங்கில் நடைபெறவுள்ளது. பேராசிரி

## பெருஞ்சித்திரனாரை விடுவிக்க கோரிக்கை

தடாச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பாவலரும், தமிழறிஞருமான பெருஞ்சித்திர

மென தமிழ்நாடு சிவில் உரிமைக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. அறுபது வயதான தமிழறிஞர் பெருஞ்சித்திர

## கூரே தங்குவதற்கு 80 லட்சம்செலவில்இருப்பிடம்

(கொழும்பு)

மிகிந்தலையில் நடைபெற்ற கிராம எழுச்சி கண்காட்சியில் கலந்துகொள்ளச் சென்ற அமைச்சர் சிறிசேன கூரேயின் தங்குமிடத்திற்கு எண்பது லட்சம் ரூபா செலவிடப்பட்டதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் 'ராவய' செய்தி வெளியிடுகையில் அவரின் இருப்பிடம் ஏற்கனவே வசதிகள் கொண்டதாக அமைக்கப்பட்டபோதும் இவ்வளவு பெருந்தொகையான நிதி இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளமை ஆச்சரியமளிப்பதாக உள்ளதாக தெரிவித்துள்ளது.

### பருத்தித்துறை


நேற்று மாலை கொழும்பில் இருந்து எமக்குக் கிடைத்த உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (க), (நி)

## சிவாஜிகணேசன் இராஜினாமா

(சென்னை)

தமிழக ஜனதாக் கட்சியின் தலைவரும் திரைப்பட நடிகருமான சிவாஜிகணேசன், தலைவர் பதவியிலிருந்தும், கட்சி அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும்இராஜினாமா செய்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்



### முருகேசு விஜயரெட்ணம் (பப)

(சுபமாலா மோட்டோர்ஸ்)

திரு. திருமதி சு. முருகேசு அவர்களின் அன்பு மகன் விஜயரெட்ணம் 25-6-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் (இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினரும்), விமலாவதியின் அன்புக் கணவரும். விஜயமாலா (உயர்தர மாணவி, இந்து மகளிர் கல்லூரி) பிரதீபா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஆ நா. க பொன்னுத்துரை, திருமதி மங்கையர்க்கரசி ஆகியோரின் மருமகனும், வ. தங்கரெத்தினம், மு. ஜெயரெட்ணம், மு. குணரெட்ணம், ந மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற மு. சண்முகரெட்ணம் (தயா), மு. பஞ்சரெட்ணம் (பாபு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று 26-6-93 சனிக்கிழமை காலை பத்துமணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,

மேற்படி வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 28-06-1993 திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. த. கந்தையா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வித்தியாலயத்தின்பழைய மாணவர்களாக விளங்குபவர்கள் குறிப்பிட்ட தினம் கூட்டத்திற்கு சமுகமளித்து தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதுடன் வித்தியாலய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான உதவிகளை வழங்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

— தலைவர்

(இ-6896)


# யாழ். மத்தியில் ஊருருவல்...

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா
வாடிக்கையாளரின் நலன்கருதி
408, ஆஸ்பத்திரி வீதி,
சண்டோஸ் மதுபானச்சாலையில்
(பழைய பஸ் நிலைய முன்பாக)
எமது தரமான, சுவையான,
உணவுப் பார்சல்களை
28ஆம் திகதி ஆனி 1993 முதல்
காலை 11-45 முதல் பி. ப. 3-30 மணிவரை
வழங்கவுள்ளோம்
என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.
மரக்கறி ரூபா 25/-
மீன்/இறைச்சி ரூபா 30/-
ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.
ஜெசித்தாரா புதுயுகத்தில் ஓர் புது உருவம்
விளம்பர வடிவமைப்பு
செனித்
(சி-6897)


## திருவாசக விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரெடுக்கும் திருவாசக விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை பிற்பகல் மூன்றுமணி அளவில் நடைபெறவுள்ளது. கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வன் வ. சிறீபிரசாந்தன், ஆசிரியர் த. சிவகுமாரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன

## பண்டிதமணி பிறந்ததின விழா

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 94 ஆவதுபிறந்த தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதிகலையரங்கில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு பதக்கங்கள் சூட்டப்படும்

## பணம் கண்டெடுப்பு

ஒரு தொகைப்பணம் 60-6465 இலக்கமுடைய எம். ஆர். எஸ். மினிபஸ்ஸில் கண்டெடுக்கப்பட்டு மேற்படி நிறுவனத்தின் கிளிநொச்சி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்சென்றுபெற்றுக்கொள்ளவும்.

## புத்திஜீவிகள்

மேற்படி நல்லெண்ணக்குழுவில் யார் யார் அங்கம் வகிப்பார்கள் என்பது குறித்தும் இக் குழுவுக்கு யார் தலைமை தாங்குவார் என்பது குறித்தும் நேற்று மாலைவரை எந்த விதத் தகவலும் வெளிவரவில்லை. (க, (நி)

2-ம் லெப். சிவபாலன் (மருதுப்பிள்ளை சந்திரநாதன்)
பூந்தோட்டம், வவுனியா.
வீரவேங்கை விஜி (பாலச்சந்திரன் இலங்கேஸ்வரன்) குச்சவெளி, திருமலை.
வீரவேங்கை நளினி (மேகலா இரத்தினராசா) உரும்பராய்.
2-ம் லெப். விசா (பிறின்ஸ்ராகல் ராஜன்) சாம்பல்தீவு, திருமலை.
வீரவேங்கை மாக்ஸ் (பத்மநாதன் ராஜ்குமார்) மடுக்கோயில், மன்னார்.
வீரவேங்கை விக்டர் (இராசரத்தினம் சத்தியபாலன்) புல்மோட்டை, திருமலை.
கப்டன் முகுந்தன் (தியாகராசா விக்கினேஸ்வரன்) தாளையடி.
வீரவேங்கை குயின்சி (தயாநிதி தர்மராசா) அராலி, வட்டுக்கோட்டை.
வீரவேங்கை சுரேஸ் (சுப்பிரமணியம் சிவகுமார்) சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.
வீரவேங்கை பன்னீர் (இரத்தினம் பன்னீர்ச்செல்வம்) கல்முனை, அம்பாறை

# பெருஞ்சித்திரனாரை விடுவிக்க கோரிக்கை

தடாச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பாவலரும், தமிழறிஞருமான பெருஞ்சித்திரனாரை விடுவிக்க வேண்டுமென தமிழ்நாடு சிவில் உரிமைக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. அறுபது வயதான தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுவிப்பது பற்றி தமிழக அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் தமிழக முதல்வரிடம் இக்குழு கோரியுள்ளது.

## வீரவணக்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் வலிகாமம் கோட்டப் பிரிவில் வைகாசி, ஆனி மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.


பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் கடற்புலிகளின் வலிகாமக் கோட்டப் பொறுப்பாளர் திரு. சிவலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## மண்ணெய்

உதவிபெறுவோருக்கான மண்ணெண்ணெய் முத்திரையின் பெறுமதி அடுத்தமாதம்முதல் 44ரூபாவாக இருக்கும்.

## புதிய தளபதி ஜோசி

பதவியிலிருந்து ஓய்வுபெற இருக்கும் இந்திய இராணுவத் தளபதிஎப். எக்ஸ் றொட்றிக்ஸ் நேற்று இந்தியத் துணை ஜனாதிபதி கே. ஆர். நாராயணனை சந்தித்து பிரியாவிடை பெற்றார். இந்த மாதம் 30 ஆம் திகதி முதல் றொட்றிக்ஸ் ஓய்வுபெற இருக்கின்றார் என்பதும் இந்தியாவின் புதிய இராணுவத் தளபதியாக டி. எம். ஜோசி பதவியேற்க இருக்கிறார் என்பதும் தெரிந்ததே. டி. எம். ஜோசி தற்போது மேற்கு பிராந்திய இராணுவ தளபதியாக இருந்து வருகின்றார்.




# முருகேசு விஜயரெட்ணம் (பப)

(சுபமாலா மோட்டோர்ஸ்)

திரு. திருமதி சு. முருகேசு அவர்களின் அன்பு மகன் விஜயரெட்ணம் 25-6-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் (இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினரும்), விமலாவதியின் அன்புக் கணவரும். விஜயமாலா (உயர்தர மாணவி, இந்து மகளிர் கல்லூரி) பிரதீபா (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஆ நா. க பொன்னுத்துரை, திருமதி மங்கையர்க்கரசி ஆகியோரின் மருமகனும். வ. தங்கரெத்தினம், மு. ஜெயரெட்ணம், மு. குணரெட்ணம், ந மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற மு. சண்முகரெட்ணம் (தயா), மு. பஞ்சரெட்ணம் (பாபு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று 26-6-93 சனிக்கிழமை காலை பத்துமணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

14A, அன்னசத்திர ஒழுங்கை, யாழ்ப்பாணம். [5221] தகவல்: மனைவி

# கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(இளைப்பாறிய அதிபர், புலோலி.)

தென்புலோலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 25-06-93 அன்று காலமானார். இவர் இளைப்பாறிய அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபரும், கோணாத்தைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பேராசிரியன் (பிரதம இரசாயன பகுப்பாய்வாளர், இ. மி. ச. கொழும்பு), கணபதிப்பிள்ளை (கடற்றொழில் விரிவாக்க அலுவலர், முல்லைத்தீவு), கதிர்காமத்தம்பி கடற்றொழில் பரிசோதகர், தாளையடி), சிவநேசன்(சவுதி அரேபியா). பொன்மலர், பூங்கோதை (பொட்சுவானா), மங்கையர்க்கரசி சிவகுமாரி, சிவமலர்[பொட்சுவானா] ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகம் [இளைப்பாறிய தபால் அதிபர்], வினாசித்தம்பி [பொட்சுவானா]. பாலசுந்தரம் [சுகாதார பணிமனை யாழ்ப்பாணம்], சிவமயம் (முகாமையாளர் ப. நோ. கூ. ச. புலோலி), சிவபாதசுந்தரம் [பொட்சுவானா], சரஸ்வதிஅம்மா (கொழும்பு), தெய்வானைப்பிள்ளை [ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை], மகேஸ்வரி, தவமலர் ஆகியோரின் மாமனாரும், திருமதி தங்கம்மா சுப்பிரமணியத்தின் அருமைச் சகோதரரும், சிவகுமாரன் [லண்டன்], மாலதி (கொழும்பு), தர்மசீலன் [கொழும்பு]. தர்சினி, தர்மரூபி, தர்ஜனன், அமிர்தகானா, அலந்ருதா, கவின்றுதா. அவனிபாஜனன், நிரஞ்சலா (பேராதனைப் பல்கலைக் கழகம்]. சசிகலா (கிழக்குப் பல்கலைக் கழகம்), மாலதி [லண்டன்], சத்தியேந்திரா [லண்டன்]. சோபா, கலைச்செல்வி [கொழும்பு]. கலையரசன் [கொழும்பு], உமாகாந்தன் [கொழும்பு], உமாதேவன் [கொழும்பு], மைதிலி, பைரவி, சிவப்பிரியா, சிவசுதன், சிவசொரூபன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் [26-06-93] சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

[5226] தகவல்: சு. கணபதிப்பிள்ளை


# அன்று சங்கம் இன்று மன்றம்

★

**26-6-93** இன்று

தலைமையுரை:
திரு. க. சொக்கலிங்கம் M. A.
திரு. டொமினிக் ஜீவா
" நான் ஏன் எழுதினேன் "
செங்கை ஆழியான்
" ஈழத்து நாவல்களில் காலப்பதிவு "
இளையவன்
" இன்றைய நிகழ்வுகள் நாளைய இலக்கியங்கள் "
செம்பியன் செல்வன்
" சிறுகதைக் கலையும் சமூகத்தில் அதன் தாக்கமும் "
திருமதி கோகிலா மகேந்திரன்
"83 இன் பின்னர் ஈழத்தமிழ் சிறுகதையின் போக்கு "
❋ ' நீதி காத்தான் ' ❋
(சிந்து நடைக் கூத்து)

திருமறைக் கலாமன்றத்தின்
# இலக்கிய விழா
**மாலை 5-30 மணி**

(அன்பளிப்பு: ஈழநாதம்)

**27-6-93** நாளை

தலைமையுரை:
பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்
(இயக்குனர்)
கவிதை
வாகரை வாணன்
" நெஞ்சு பொறுக்குதில்லையே "
திரு. சோ. பத்மநாதன்
" வடக்கிருத்தல் "
காரை. செ. சுந்தரம்பிள்ளை
" என்று தணியும் "
❋ பேராசிரியர் கா. சிவத்தம்பி
அவர்களைப் பாராட்டி பொன்னாடை போர்த்தல்
பேராசிரியர் தலைமையில்
கருத்தரங்கு - 'தமிழ் இலக்கியத்தின் சமரசம்'
பங்குபற்றுவோர்
கலாநிதி A. J. V. சந்திரகாந்தன் அடிகள்
கலாநிதி சோ. கிருஷ்ணராஜா
❋ இலங்கையர்கோன் விலங்கு ❋
(நடன நாடகம்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.